# 5 அபரக் கிரியைகள்

ஒருவர் இறந்த பின் அவரது ஆன்மா ஈடேற்றம் கருதி அவரது பிள்ளைகள் முதலியோரினால் செய்யப்படும் கிரியைகளே அபரக் கிரியைகள் எனப்படும். அபரம் என்பது பிந்தியது எனவும், கிரியை என்பது செயல் எனவும் பொருள்படும். எனவே இறப்புக்குப் பின் நிகழ்த்தப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள் ஆகும். அபரக்கிரியைகள் இறந்தவரின் ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி, உயர்ந்த நிலை அடையும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பண்டுதொட்டு இன்றுவரை வழிவழியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அபரக்கிரியைகளின் சிறப்பினை இதிகாச புராணங்களும், சிவாகமங்களும், பத்ததிகளும் விளக்குகின்றன.

அபரக்கிரியைகள் சூர்ணோற்சவம் (சுண்ணமிடித்தல்) தகனம் (பிரேதத்தை எரித்தல்), அஸ்தி சஞ்சயனம் (சாம்பல் அள்ளுதல்), அந்தியேட்டி (கடைசி யாகம்), ஏகோதிட்டம் (இறந்தவருக்காக ஒருவரை வரித்துக் கொடுத்தல்), சபீண்டீகரணம் (பிதிர்களுடன் இணைத்தல்), மாசிகம் (மாதந்தோறும் செய்யப்படுவது), சிரார்த்தம் (ஆண்டுத்திதி), மகாளயம் என பல கிரியைகளைக் கொண்டுள்ளது. சிவ தீட்சை பெற்றோரின் பூதவுடலை சிவமாக பாவித்து, மேற்படி கிரியைகளை ஆற்றுவர், சிவ தீட்சை பெறாதவர்களுக்கு பூதவுடலில் தீட்சை வைத்த பின்பு கிரியைகள் செய்யப்படும்.ஆயினும் நாட்டார் வழக்காறு சார்ந்த அபரக்கிரிகைகளில் இத்தகைய கிரியைகள் பல இடம்பெறுவதில்லை. வெவவேறு பிரதேசங்களில்வேறுபட்ட கிரியைகள் மேற்கொள்ளப்படுவதைக் கானமுடியும்.

## (அ) வீட்டுச் சடங்கு

ஒருவர் இறந்தவுடன் அவரின் பூதவுடலுக்கு புதல்வர்களே கிரியைகளைச் செய்தல் வேண்டும். தந்தைக்கு மூத்த புதல்வனும், தாய்க்கு இளைய மகனும் கிரியைகள் செய்தல் வேண்டும். புதல்வர்கள் இல்லாதவிடத்து ஆண்வழி தந்தை வழி உறவினர் இக்கிரியைகளைச் செய்யலாம். ஒருவர் இறந்ததும் பூதவுடலை வீட்டின் முன்புள்ள பிரதான மண்டபத்தில் படுக்க வைப்பர். வீட்டின் தெற்கு புறத்தில் குளிப்பாட்டுதல் இடம்பெறும். அரப்பு எண்ணெய் பூசி அரிசிமா, மஞ்சள்மா, பால், தயிர் என்பவற்றை தடவி இளநீர், கும்பநீர் என்பவற்றால் உடலின் கால்பகுதியில் தொடங்கி தலைவரை குளிப்பாட்டுவர். பின் பூதவுடலுக்கு பன்னீர் முதலிய வாசனைப் பொருள்களைத் தெளிப்பர். ஆடை அணிவித்து மலர் மாலை சூட்டி அலங்காரம் செய்து, பூதவுடலை மண்டபத்திற்குக் கொண்டு வந்து தெற்கே தலையையும், வடக்கே காலையும் வைத்துக்கிடத்துவர். குருக்கள், வீட்டு முற்றத்தில் மண்டபம் அமைத்து, வருண கும்ப பூசை அக்கினிபூசை செய்து முடித்த பின் பூதவுடலுக்கு திருநீறு, சந்தனம், குங்குமம் என்பன இடப்படும். இதன் பின் பொற்சுண்ணம் காற்புள்ளி என்னும் நிகழ்வு இடம்பெறும்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

திருப்பொற்சுண்ணப் பாடல்களைப் பாடி, அறுகு, மஞ்சள் என்பவற்றை உரலில் இட்டு இடித்து பெறப்பட்ட சுண்ணப்பொடியை நீரிட்டுக் குழைத்து பூதவுடலில் கண், நெற்றி என்பவற்றில் வைப்பதுடன் உடலெங்கும் தெளிப்பர்.


கற்பூரம் காட்டுதல், பேரப்பிள்ளைகள் தீப்பந்தம் பிடித்தல், திருமுறை ஓதல், பெண்கள் வாய்க்கரிசி போடுதல் என்ற ஒழுங்கு முறையில் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு, வீட்டிலிருந்து பூதவுடலின் கால்கள் முன்பக்கமாக இருக்கும் வகையில் மயானத்திற்கு உரிய முறையில் எடுத்துச் செல்லப்படும். அவ்வேளை கர்த்தா மட்குடக்கும்பம் தோளில் சுமந்து, தீச்சட்டியுடன் பூதவுடலுக்கு பின்செல்ல ஆசௌச உரிமையாளர்களும் பின் செல்ல வேண்டும்.

## (ஆ) சுடலைச் சடங்கு

சுடலையில் விறகுகள் தெற்கு வடக்காக அடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதன்மேல் பூதவுடலின் தலையைத் தெற்குப் பக்கமாக அமையும்படி வைக்க வேண்டும். சுடலைக்கு வந்தவர்கள் வாய்க்கரிசி போட்டபின் கர்த்தா வாய்க்கரிசி போட்டு, கும்பத்துடன் இடப்புறமாக மூன்று முறை சுற்றி வந்து, குடத்தை உடைத்தபின் பூதவுடலின் தலைப்பக்கமாகக் கொள்ளிவைத்தல் வேண்டும். பின் கால்மாட்டில் சென்று பூணூல், பவித்திரம் என்பவற்றைச் சிதையில் இட்டபின் திரும்பிப் பார்க்காமல் வீடு செல்ல வேண்டும்.

வீட்டிலுள்ளோர் வீட்டைக் கழுவி சுத்தம் செய்து, தாமும் நீராடி தூய்மையாக இருப்பர். மயானத்திலிருந்து திரும்பியவர்கள் நீராடி, தம்மைச் சுத்தம் செய்து, வீட்டின் உள்ளே சென்று, விளக்கேற்றி அன்னம், இளநீர் என்பவற்றைப் படைத்து, இறந்தவர்க்கு வழிபாடு செய்வர். இந்நிகழ்வின் பின் மூன்றாம் அல்லது ஐந்தாம் நாள் தகிக்கப்பட்டவரின் எலும்பையும், சாம்பலையும் முறையான சமஸ்காரங்களுடன் எடுத்து புண்ணிய தீர்த்தத்தில் சேர்த்தல் வேண்டும். இதனையே அஸ்தி சஞ்சயனம், அல்லது காடாற்றுதல் என்று அழைப்பர்.

## (இ) அந்தியேட்டி



அந்தியேட்டி என்னும் சொல்லில் அந்திய என்பது இறுதியையும், இட்டி என்பது யாகத்தையும் குறிக்கும். இறந்தவரின் சமயாச்சாரங்களில் உண்டான குறை குற்றங்கள் நீங்கும் பொருட்டு,உடலைவிட்டு நீங்கியஉயிரின்மேன்மையின்பொருட்டும் அந்தியேட்டிக்கிரியைகள் செய்யப்படும். அந்தியேட்டிக் கிரியைகள் நிர்வாண அந்தியேட்டி, விசேட அந்தியேட்டி, சமய அந்தியேட்டி என மூவகைப்படும். முன்னைய இரண்டும் உயர் தீட்சையாளருக்குரியவை. சமய அந்தியேட்டி சாதாரண தீட்சையாளருக்குரியது இதில் இறந்தவரை பிதிர் தேவர்களோடு சேர்ப்பதற்காக பிண்டமிட்டுச் செய்யப்படும் கிரியை சபிண்டீகரணம் ஆகும். (பிண்டம் என்பது அரிசிமா, எள், உழுந்து, பால், தேன், பழம், சர்க்கரை போன்ற பொருட்களால் செய்யப்பட்ட உருண்டையாகும்.)

## (ஈ) சிரார்த்தம்

சிரத்தையோடு செய்ய வேண்டியது சிரார்த்தம் எனப்படும். சிரார்த்தம் பிதிரக்கருமம் என்னும் பொருள் உடையதாய் எல்லாப் பிதிர்க்கருமங்களையும் குறிப்பதாயினும் இது ஆட்டைத்திவசம் (ஒருவர் இறந்து ஒரு ஆண்டின் பின் செய்யும் சிரார்த்தம்) திவசம் (அதனை அடுத்து ஆண்டுதோறும் அதே திதியில் செய்யப்படுவது) என்பவற்றையே குறித்து வழங்குகின்றது திவசத்தினைத்திதி எனவும் அழைப்பர்.

இந்நிகழ்வில் இறந்தவரது ஆன்மா ஈடேற்ற பரிபூரண சித்தியின் பொருட்டு அரிசி, உழுந்து, எள்ளு, தயிர், பால், தேன், வாழைப்பழம், நெய் என்னும் பொருட்களை உருண்டையாக உருட்டி பிண்டமிடல் இடம் பெறும். சிரார்த்தக் கிரியைகளில் எள்ளும், தண்ணீரும் இறைத்தல் முக்கிய கருமமாகும். தர்ப்பையைக் குறுக்காகப் பிடித்து, அத்தர்ப்பை மூலத்திலிருந்து எள்ளுக் கலந்த நீரைப் பெருவிரல் மூலமாக விழச்செய்வர். அவ்வேளையில் தலை முறைப் பெயர்கள் சொல்லப்படும். தர்ப்பண முடிவிலே ''என் குலப் பிதிர்களே பூமியில் விடப்பட்ட இந்த நீரினால் நற்கதியும், திருப்தியும் அடையுங்கள்''. என்று சொல்லித் தர்ப்பை எள்ளுடன் தீர்த்தத்தில் போடப்படும்.

ஒருவர் இறந்த திதியைக் கொண்டே சிரார்த்தம் நிச்சயிக்கப்படுகிறது. ஒரு மாதத்தில் இரு தடவைகள் சிரார்த்தத்திதி வந்தால் பின்னைய திதியினைக் கைக்கொள்ள வேண்டும். என்பது விதி. இறந்த தந்தையின் பொருட்டு ஆடி அமாவாசையிலும், தாய்க்கு சித்திரா பூரணையிலும் சிரார்த்தம் செய்ய வேண்டும்.

## (உ) மகாளயம்

மனித வாழ்க்கையில் பிதிரர் வழிபாடு மிக இன்றியமையாதது. புராண, இதிகாச, ஆகமங்கள், பத்ததிகள், தோத்திரப்பாடல்கள் முதலானவற்றில் பிதிர் வழிபாட்டின் சிறப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையே முன்னோர் வழிபாடு என்பர். மகாளயம் என்ற சொல்லுக்கு பெரிய ஒடுக்கம் என்பது பொருள். வருடத்தில் புரட்டாதி மாதத்து அபரபக்கம் (அமாவாசைக்கு முன் 15 நாள்) பிதிரர்க்கு விசேடகாலம் என்னும் கருத்துண்டு. அக்காலத்தில் அவர்களை திருப்தி செய்யும் பொருட்டு செய்யப்படும் சிரார்த்தம், மகாளய சிரார்த்தம் எனப்படும். மகான்களாகிய பிதிர்கள் பூவுலகில் தங்கும் பதினைந்து நாட்களே மகாளயப்பட்சம் என அழைக்கப்படும்.

இக்காலத்தில் இறந்த பிதிர்களைக்குறித்து தர்ப்பணமும், மகாளய சிரார்த்தமும் செய்யப்பட வேண்டும். மகாளய காலத்தில் பிதிர்கள் பிதிர்லோகம் நீங்கி பூவுலகம் வந்து, பசியினாலும், தாகத்தினாலும் தமது பிள்ளைகள் முதலியோரின் இல்லம் நாடி, பூவுலகில் தமக்கு நெய், தேன், பாயாசம், எள்ளுடன், நீர் என்பன கிடைக்கமாட்டாதா என ஏங்குகிறார்கள். எனவே தான் இக்காலத்தில் செய்யும் தர்ப்பணமும் சிரார்த்தமும் சிறப்பானதாகும்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## பாடச்சுருக்கம்

- ஒருவர் இறந்த பின் அவரது ஆத்ம ஈடேற்றம் கருதிச் செய்யப்படுவது அபரக்கிரியை ஆகும்.
- அபரக்கிரியைகள் தகனக்கிரியை, அஸ்தி சஞ்சயனம், அந்தியேட்டி, சபிண்டீகரணம், மாசியம், சிரார்த்தம் எனப் பலவகைப்படும்.
- வருடம் ஒருமுறை இறந்த திதியில் செய்யப்படுவது சிரார்த்தக் கிரியையாகும்.
- புரட்டாதி மாதத்து அமாவாசை தொடங்கிப் பூர்வபட்சம் வரையுமுள்ள காலம் மகாளயபட்ச காலமாகும்.
- பிதிர்கள் அருள் வேண்டி விரதங்கள் அனுட்டிக்கப்பட வேண்டும்.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1. அபரக்கிரியை என்ற சொல்லின் பொருள் யாது?
2. அபரக்கிரியையின் வகைகள் எவை?
3. அந்தியேட்டிக் கிரியை செய்யப்படுவதன் நோக்கம் யாது?
4. சபிண்டீகரணம் என்றால் என்ன?
5. பிண்டத்திற்கு பயன்படுத்தும் பொருட்கள் எவை?

## ௐ செயற்பாடு

நீங்கள் அவதானித்த அபரக்கிரியைகளைப் பட்டியல்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக